DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, ERODE

CC.No.18/2024

Date: 01.06.2026

Name: கஷ்தூரி, க/பெ.S.குமார், வயது.60 (PW4)

M.P.No:05/2026எதிரி தரப்பில் தாக்கல் செய்த மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

1. எதிரி அடித்ததாக சொல்லப்படும் போலீசாரின் பெயர் என்னவென்றால், சம்பவம் நடந்து வெகுநாட்கள் ஆகிவிட்டதால் எனக்கு ஞாபகத்தில் இல்லை. இந்த சம்பவம் குறித்து போலீசார் என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்றால், நீதிமன்றத்தில் தான் விசாரித்தார்கள், சம்பவத்தன்று சம்பவம் நடந்ததுடன் முடிந்து விட்டது, அதன் பின்னிட்டு காவல் நிலையம் அழைத்து விசாரிக்கவில்லை நேரடியாக நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க வர சொன்னார்கள்.

2. சம்பவம் நடந்த அன்று எதற்காக காவல் நிலையம் சென்றேன் என்றால், நான் எதிரிக்கு பணம் தர வேண்டும் என் மீது அதற்காக எதிரி கலெக்டர் அலுவலகத்தில் புகார் அளித்துள்ளார் அதற்காக விசாரணைக்கு வருமாறு காவல் நிலையத்தில் அழைத்தார்கள் நான் சென்றேன். அந்த புகார் குறித்து என்னையும், எதிரியையும் விசாரித்தார்களா என்றால், விசாரித்தார்கள். இதுவரையில் எத்தனை தடவை எதிரி என் மீது பணம் தருவதற்காக புகார் அளித்திருப்பார் என்றால், இரண்டு, மூன்று தடவை அளித்திருப்பார். அவ்வாறு அளிக்கப்பட்ட புகார்களின் மீது காவல் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் ஏதேனும் முடிவு காணப்பட்டதா என்றால், நான் எதிரியிடம் பணம் தருவதற்கு தயாராக இருந்தேன், ஆனால் எதிரி பணம் பெற மறுத்து விட்டார்.

3. எதிரி சம்பவத்தின் போது என்னை செருப்பால் அடித்ததாக சொல்லி உள்ளேன் அந்த செருப்பு எந்த வகையைச் சேர்ந்தது, என்ன நிறத்தில் இருந்தது என்றால், ரோஸ் கலரில் இருந்தது. எந்த கையில் வைத்து அடித்தார் என்றால், வலது கையில் வைத்து அடித்தார். போலீசாரை அடித்த போது செருப்பு எந்த கையில் வைத்து அடித்தார் என்றால், போலீசார் அவர் என்னை அடித்த போது விளக்குவதற்காக முயற்சித்தார்கள், அப்போது போலீசாரையும் வலது கையில் தான் வைத்திருந்த செருப்பால் அடித்தார்.

4. எனக்கு ஏதேனும் காயம் ஏற்பட்டதா என்றால், எனக்கு கையில் நகக்கீரல் மட்டும் இருந்தது, பெண் காவலருக்கு மட்டும் காயம் ஏற்பட்டது. எதிரி என்னை அடித்தபோது அதிலிருந்து விலக்களித்த போலீசாரின் பெயர் ஞாபகம் உள்ளதா என்றால், மொத்தமாக மூன்று போலீசார் தடுத்தார்கள் ஒரு போலீசார் தற்போது இறந்து விட்டார். இரண்டு போலீசாரின் பெயர்கள் எனக்கு ஞாபகத்தில். இந்த விபரங்கள் அனைத்தையும் நான் நீதிமன்ற விசாரணைக்கு வருவதற்கு முன்னதாக தெரிந்து கொண்டேன் என்றால், சரிதான்.

5. நான் எதிரிக்கு பணம் தர வேண்டும் என்பதற்காகவும், மீண்டும் எதிரி என்னை பணம் கேட்டு தொந்தரவு செய்யக்கூடாது என்பதற்காகவும் மட்டுமே இந்த வழக்கினை கொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் எதிரி விடுதலை செய்யப்பட வேண்டியவர் என்றால், சரியல்ல. ஒரு போலீசார் தற்போது இல்லை இறந்துவிட்டார் இரண்டு போல சாரின் பெயர்கள்

**மறுவிசாரணை: இல்லை.**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.

J.M. A.M.C.